Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 127

வியாழக்கிழமை
02 ஏப்ரல் 2026

பங்குனி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

G.C.E. A/L
**8,300 பேருக்கு 3 'ஏ' சித்தி**
விரிவு பக்கம்:- 03

## இலங்கைக்கு எரிபொருள் கைகொடுத்தது ரஷ்யா!

கப்பல்கள் விரைவில் வருகை

கொழும்பு, ஏப். 2
ரஷ்யாவிடம் இருந்து இலங்கைக்கு எரிபொருள் கிடைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இறுதி செய்யப்பட்டுள்ளது என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.
இது தொடர்பில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்ததாவது:-
நாட்டில் அண்மையில் ஏற் »11



உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்

# ராஜபக்சக்களைக் காப்பற்ற திரைமறைவில் பெரும் சதி!

கொழும்பு, ஏப்ரல் 2

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில், ராஜபக்சக்களைக் காப்பாற்றுவதற்கு பெரும் சதி இடம்பெறுகிறது என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க கடுமையாக விமர்சித்துள்ளார்.** »11



தையிட்டியில்

## ஆக்கிரமிப்பு விகாரையை உடனடியாக அகற்றுக!

பொதுமக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 2
யாழ்ப்பாணம் - தையிட்டி பகுதியில் பொதுமக்களின் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை அகற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. »11

கணிதப் பிரிவில்

## கிளிநொச்சி மாணவன் தேசியத்தில் முதலிடம்



கிளிநொச்சி, ஏப். 2
2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில், கணிதப்பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவன் தெ.திருக்குமரன் »11

நாடு தழுவிய ரீதியில்

## அரச மருத்துவர்கள் இன்று போராட்டம்!

கொழும்பு, ஏப். 2
இன்று காலை தொடக்கம் நாளை காலைவரை பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.
அரச மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்களைக் கண்டிக்கும் வகையிலேயே நாடு »11

## பலவந்தமாக மருத்துவர்களிடம் சேவையைப் பெறுவதற்கு முயற்சி!

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 2
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம், மருத்துவர்களைக் கட்டாயப்படுத்தி அவர்களிடம் இருந்து சேவையைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.
நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில், அரச மருத்துவ அதிகாரிகள் »11



“எந்த நெருக்கடி வந்தாலும் எங்கட பிள்ளையள் படிப்பில சாதிக் கிறதை ஆராலும் தடுக்கேலாது கண்டியளோ”
புரச்சந்தி புரளி

உயிரியல் தொழில்நுட்பத்துறை

## கடற்படையால் படுகொலையானவரின் மகள் உயர்தரப் பெறுபேறில் யாழில் முதலிடம்!



யாழ்ப்பாணம், ஏப். 2
இலங்கைக் கடற்படையால் படுகொலை செய்யப்பட்டவரின் மகளான தேவதாஸ் கிஷானி உயிரியல் தொழில்நுட்பத் துறையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார்.
2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினமிரவு வெளியாகின. யாழ்ப்பாணம் »11



## போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் ஐவர் கைது!

வவுனியா, ஏப். 2
போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், வவுனியாவில் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக் »11

**வேம்படி மகளிர் கல்லூரி; 41 மாணவிகளுக்கு '3ஏ'**
விரிவு பக்கம்:- 07

**யாழ். இந்துக் கல்லூரியில் 64 மாணவர்களுக்கு '3ஏ'**
விரிவு பக்கம்:- 07

## ஊட்டச்சத்துக் குறைபாடு தீவிரமாகும் அபாயநிலை

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 2
தற்போதைய நெருக்கடி நிலைமைகளால் நாட்டில் ஊட்டச்சத்துக் குறைபாடு தீவிரமாகும் ஆபத்து அதிகரித்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் அண்மைக்காலமாக »11

மக்கள் ம... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 01.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4393 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 25 32 34 74 |
| விசேட எழுத்து | X |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 01.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1460 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 27 50 60 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 01.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0419 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 0 4 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 01.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2499 |
| ஆங்கில எழுத்து | N |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கங்கள் | 26 36 50 71 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 01.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6151 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 5 5 6 0 2 3 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 01.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2181 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 15 33 38 57 |
| விசேட எழுத்து | B |


**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 01.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0267 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 13 26 37 |

# அரிசித் தட்டுப்பாட்டைத் தவிர்க்க சம்பா, கீரிச்சம்பா இறக்குமதி!

கொழும்பு, ஏப்.2

**உள்நாட்டுச் சந்தையில் நிலவும் சம்பா மற்றும் கீரிச்சம்பா அரிசிக்கான தட்டுப்பாட்டை நீக்கவும், நுகர்வோரின் தேவையைப் பூர்த்திசெய்யவும் மாற்று அரிசி வகைகளை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**



விவசாயத் திணைக்களம் மற்றும் ஆய்வு நிறுவனங்களின் தரவுகளின்படி, 2025 மற்றும் 2026 பெரும்போகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சம்பா மற்றும் கீரிச்சம்பா அரிசிகளின் அளவு நாட்டின் தேவைக்குப் போதுமானதாக இல்லை.

இதனால் எதிர்வரும் மே மாதம் முதல் சந்தையில் கடுமையான அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் என உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக்குழு எச்சரித்துள்ளது. அதற்கமைய சம்பா மற்றும் கீரிச்சம்பாவுக்கு இணையான சுவை மற்றும் தன்மையைக் கொண்ட பொன்னிச் சம்பா, கீரிபால் பொன்னி , ஜி. ஆர். 11 ஆகிய அரிசிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. இறக்குமதியாளர்கள் ஏப்ரல் 1 முதல் ஏப்ரல் 30 வரை இந்த அரிசி வகைகளை இறக்குமதி செய்யமுடியும். எந்தவொரு இறக்குமதியாளரும் அதிகபட்சமாக 1,040 மெற்றிக் தொன் அரிசியை மட்டுமே இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவார். இறக்குமதி செய்யப்படும் அரிசித்தொகுதிகள் மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாகச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படவேண்டும். இந்த அவசரத்தேவையை முன்னிட்டு, சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் தனியான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

விவசாய அமைச்சர் மற்றும் வர்த்தக அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த இந்தக் கூட்டுயோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

## 61,000 தொன் நெல் அரசால் கொள்வனவு

கொழும்பு, ஏப்.2

இதுவரை விவசாயிகளிடமிருந்து 61,000 மெற்றிக்தொன்னுக்கும் அதிகமான நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் பெறுமதி 7,383 மில்லியன் ரூபாவாகும். இதன்கீழ் 17,690 மெற்றிக்தொன் வெள்ளை நாட்டரிசி நெல்லும், 43,836 மெற்றிக்தொன் சிவப்பு நாட்டரிசி நெல்லும், 160,000 கிலோகிராம் வெள்ளைச் சம்பாவும், 756,000 கிலோகிராம் சிவப்புச் சம்பாவும், 6,276 கிலோகிராம் கீரிச்சம்பாவும் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## ஆழ்கடலில் சிக்கியது 300 கிலோ ஹெரோய்ன்

கொழும்பு, ஏப்.2

வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவினரிடமிருந்து கிடைத்த தகவலுக்கமைய பேருவளைக்கு அப்பாலுள்ள ஆழ்கடல் பகுதியில் இலங்கைக் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போது 300 கிலோகிராமுக்கும் அதிகமான ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

படகிலிருந்த 298 உரப்பைகளில் இந்த போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தப் படகு இலங்கைக்குச் சொந்தமான பலநாள் மீன்பிடிப்படகு எனத் தெரியவந்துள்ளதுடன் அதிலிருந்த 6 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட இந்தப் போதைப்பொருள் தொகையின் பெறுமதி சுமார் 6,000 மில்லியன் ரூபா எனக் கடற்படை தெரிவித்துள்ளது. (ச-இ)

## தேசிய வெசாக் பண்டிகை மாத்தறையில்


கொழும்பு, ஏப். 2

2026ஆம் ஆண்டுக்கான தேசிய வெசாக் பண்டிகையை மாத்தறை மாவட்டத்தில் கொண்டாடுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இவ்வருடத்திற்கான பிரதான தேசிய வெசாக் கொண்டாட்டங்கள் மாத்தறை திஹகொடவில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற புராதன மிதெல்லவல விகாரையில் நடைபெறவுள்ளன.

மே மாதம் 27ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 2ஆம் திகதி வரை 'வெசாக் வாரமாக' அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் நாடு முழுவதும் தானசாலைகள், பக்திக் கீதங்கள் மற்றும் மத வழிபாட்டு நிகழ்வுகளை ஒழுங்குசெய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 01.04.2026 | புதன்கிழமை | 0859 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| L | 2 1 2 0 4 0 |

**Super Ball** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 01.04.2026 | புதன்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 3125 | V | 32 46 49 56 |

**சனிதா** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 01.04.2026 | புதன்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| O | 06 08 35 39 | 5286 |

**SASIRI** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 01.04.2026 | புதன்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0954 | 05 13 45 |

**லக்ன ராசி** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 01.04.2026 | புதன்கிழமை |

| விருச்சிகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 05 23 50 52 | 4837 |

**KAPRUKA** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 01.04.2026 | புதன்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| W | 34 | 23 24 52 55 | 2301 |

**அத கோடிபதி** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 01.04.2026 | புதன்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| X | 06 13 34 49 | 2951 |

## 39 நாடுகளுக்கு 6 மாத இலவச விசா

கொழும்பு, ஏப். 2

இலங்கையை உலகின் முன்னணி சுற்றுலா இலக்குகளில் ஒன்றாக மாற்றும் நோக்கில், தெரிவுசெய்யப்பட்ட 39 நாடுகளின் பிரஜைகளுக்கு 6 மாத காலத்துக்கு இலவச சுற்றுலா விசா வழங்கும் புதிய திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு 2025 ஜூலை மாதம் முதற்கட்ட அனுமதி வழங்கப்பட்ட நிலையில், தற்போது இதற்கான சட்டவரைவுகள் சட்ட ஆலோசகரால் தயாரிக்கப்பட்டுள்ளன.

குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மாற்றங்கள் விரைவில் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்தியா, சீனா, ஜப்பான், இந்தோனேஷியா, மலேசியா, பாகிஸ்தான், நேபாளம், தாய்லாந்து, ஈரான், இஸ்ரேல், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கட்டார், குவைத், ஓமான், பஹ்ரைன், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ரஷ்யா, பெலாரஸ், ஸ்பெயின், சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், ஒஸ்திரியா, டென்மார்க், பின்லாந்து, நோர்வே, சுவீடன், போலந்து, செக் குடியரசு, துருக்கி, கசகஸ்தான், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் கொரியா ஆகிய நாடுகளுக்கே இந்தச் சலுகை வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# சர்வதேசத் தரத்தை எட்டத் தவறிய புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம்

சர்வதேச ஆய்வாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 2

**இலங்கை அரசாங்கத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவு', சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை எதிர்பார்க்கும் ஐந்து அடிப்படை முன்நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யவில்லை என நெதர்லாந்து ஆய்வாளர் நிக்கி சியாம்பாகோ சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர்மேலும்தெரிவிக்கையில், பயங்கரவாதம் குறித்த தெளிவான வரையறை, சட்டபூர்வமான மற்றும் அவசியமான தேவை, தன்னிச்சையான தடுத்துவைப்புக்கு எதிரான பாதுகாப்பு, நீதித்துறை மேற்பார்வை மற்றும் பொறுப்புக்கூறல், சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற தண்டனைகளுக்கு எதிரான தடை ஆகியஐந்துநிபந்தனைகளையும்பூர்த்திசெய்யத்தவறியுள்ளது. தற்போது முன்வைக்கப்பட்டுள்ள வரைவு பழைய அரசாங்கங்களின் கருத்துகளையே பிரதிபலிப்பதுடன் அர்த்தமுள்ள மாற்றங்களைச் செய்யப் புதிய நிர்வாகம் தயங்குகின்றது என்பதையுமே எடுத்துக்காட்டுகிறது. இலங்கை தற்போது அனுபவித்துவரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் பெறுவதற்கு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தைச் சர்வதேசத் தரத்துக்கு ஏற்ப மாற்றுவது ஒரு முக்கியமான நிபந்தனையாகும். இந்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால், 2010ஆம் ஆண்டு ஏற்பட்டது போன்றே ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை இடைநிறுத்தப்படலாம் அல்லது புதுப்பிக்கப்படாமல் போகலாம். இது இலங்கையின் ஏற்கனவே பலவீனமாக உள்ள பொருளாதாரத்தில் பெரும் எதிர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த அணுகுமுறை சட்டத்தின் ஆட்சியைச் சீர்குலைப்பதுடன், இலங்கையின் போருக்குப் பின்னரான இடைக்கால நீதிச் செயன்முறைகளையும் கேள்விக்குறியாக்கும் - என்றார். (ச-இ)

## 62.64 சதவீதமானோர் பல்கலைநுழைவுக்கு தகுதி

கொழும்பு, ஏப்.2

2025ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 62.64 சதவீதமானோர் பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதிபெற்றுள்ளனர் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமார் லியனகே தெரிவித்தார்.

பரீட்சை எழுதிய 2 இலட்சத்து 81 ஆயிரத்து 810 பரீட்சார்த்திகளில் ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 527 பேர் பல்கலைக்கழகச் சேர்க்கைக்கு தகுதிபெற்றுள்ளனர்.


அதேவேளை 111 பரீட்சார்த்திகளின் பரீட்சை முடிவுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## 8,300 பேருக்கு 3 'ஏ' சித்தி

கொழும்பு, ஏப்.2

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் 8 ஆயிரத்து 300 பரீட்சார்த்திகள் மூன்று பாடங்களில் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அவர்களில் 7 ஆயிரத்து 477 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 823 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குகின்றனர். அதேவேளை 30 ஆயிரத்து 898 பரீட்சார்த்திகள் எந்தப் பாடத்திலும்சித்திபெறவில்லைஎன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## மந்தாரமான வானிலை; விமானசேவை பாதிப்பு

கொழும்பு, ஏப். 2

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையப் பகுதியில் நிலவிய சீரற்ற வானிலை மற்றும் குறைந்த பார்வைத்திறன் காரணமாக, பல விமானங்கள் தரையிறங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

கட்டுநாயக்க வான்பரப்பில் நேற்றுமுன்தினம் நிலவிய மந்தாரமான வானிலை மற்றும் கடும் மேகமூட்டம் காரணமாக, தரையிறங்குவதற்குத் தயாராக இருந்த பல விமானங்கள் நீண்டநேரம் வானில் வட்டமிட்டபடி காத்திருக்கவேண்டிய சூழல் ஏற்பட்டது.

விமானங்கள் தாமதமாகத் தரையிறங்கியதாலும், சில விமானங்கள் மாற்று விமான நிலையங்களுக்குத் திருப்பிவிடப்பட்டதாலும் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். (ச-இ)

## புத்தாண்டையொட்டி விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஏப்.2

புத்தாண்டுக் காலத்தை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்புக்காகப் பொலிஸாரால் விசேட பாதுகாப்புத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள 608 பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்தப் பாதுகாப்புத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான எப். யூ. வுட்லர் தெரிவித்துள்ளார்.

வாகனச் சோதனைகள் உள்ளிட்ட வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## கணக்குச் சரிவருமோ?

சோழியன் குடுமி சும்மா ஆடாது. அதைமாதிரித்தான் இஞ்சயும் கனபேர் தாங்கள் ஏதோ பிரதியுபகாரம் பாக்காமல் சனத்துக்கு நல்லது செய்யிறது மாதிரி 'சீன்' போடுகினம் எண்டால் கட்டாயம் அதைவைச்சு ஏதோ ஆதாயம் தேடப்போயினம் எண்டுதான் அர்த்தம். இப்பிடித்தான் கிளிநொச்சியில கொஞ்சநாளைக்கு முன்னம் வெளிநாட்டுக்குப் போன ஒருத்தர் கிளிநொச்சியைப் பசுமையாக்கப் போறன் எண்டு பெருமெடுப்பில இறங்கினவர். தானொரு முன்னாள் போராளி எண்டும், கூட்டமைப்பு உருவாகேக்க சம்பந்தருக்கு தேத்தண்ணி குடுக்கிற, ஆருக்குமே கிடைக்காத முக்கியமான ராஜதந்திரப் பொறுப்பு தனக்குக் கிடைச்சது எண்டும் சொல்லிக்கொண்டு, கிளிநொச்சி முழுக்க மரங்களை நடத்தொடங்கினார். ஆனால் ஆள் ஏஜென்ஸி வேலை செய்யிறார் எண்டும், கனபேரை வெளிநாட்டுக்கு எடுத்துவிடுறன் எண்டு ஏமாத்தினவர் எண்டும் அப்பிடி தட்டிச்சுத்தி உழைச்சதை மறைக்கத்தான் 'பசுமைக்காவலன்' எண்ட முகமூடி போட்டு மறைக்க வெளிக்கிடுறார் எண்டும் அரசல் புரசலாக் கதையளும் வரத் தொடங்கிட்டுது.

ஆனாலும் அவர் என்னத்துக்காக மரம் நட்டவர் எண்டது இப்ப வெட்டவெளிச்சமாகிட்டுது. வீட்டுக்கட்சியின்ர திறப்பை இப்ப கையில வைச்சிருக்கிற அப்புக்காத்தர், தன்ர அரசியலுக்குப் பெரும் முட்டுக்கட்டையா இருக்கிற கிளிநொச்சி வாத்தியாரை விழுத்திறதுக்கு இந்த மரத்தை நட்ட மாவீரனை பாவிக்கப் போறாராம். கிளிநொச்சிதான் வாத்தியாரின்ர வாக்குக் கோட்டை. அதை இதுவரைக்கும் ஆராலும் அசைக்க முடியேலை. இப்ப கட்சிக்குள்ள ஒரு பிரச்சினை வந்து, வாத்தியார் வெளியேறி சுயேச்சையா நிண்டாலும், அந்த வாக்குவங்கி அப்பிடியே இருக்கும். அது வீட்டுக்கட்சிக்குத்தான் பெரும் பின்னடைவா இருக்கும். வாத்தியார் கோவிச்சுக்கொண்டு வெளியில போனாலும், அவரும் வெல்லக்கூடாது கட்சியும் விழக்கூடாது எண்டதுக்காக இப்பவே அப்புக்காத்தர் காய் நகர்த்தத்தொடங்கிட்டார்.

மாகாணசபைத் தேர்தலில சங்குக்காரரும் வீட்டுக் கட்சியோட சேர்ந்துதான் எலக்சன் கேக்கப் போயினம். சங்குக்கூட்டணியில கேடயக் கட்சியும் இருக்குது. அந்தக் கட்சிக்கு கிளிநொச்சியில குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவுக்கு வாக்குகள் இருக்கு. அதோட சேர்த்து இன்னொரு பக்கமாயும் பலப்படுத்தினால், வாத்தியாரால வாற அளவுக்கு இல்லாட்டியும் ஓரளவுக்கு கௌரவமான வாக்குகளை எடுக்கலாம், அதை வைச்சுக்கொண்டு வாத்தியார் போனாலும் கட்சியின்ர வாக்குகளுக்குச் சேதாரம் இல்லை எண்டு சொல்லலாம். விழுந்தும் மீசையில மண் படேலை எண்டு சொல்லுறதுக்குக்குத்தான் இப்ப ஆள்பிடிக்கிற வேலையில அப்புக்காத்தர் இறங்கியிருக்கிறார். அதால மரம்நட்டுக்கொண்டு திரிஞ்சவரைச் சேர்த்தால், அவரோட முன்னாள் போராளியளையும் கட்சிக்குள்ள கொண்டந்து வாத்தியாருக்குச் 'செக்' வைக்கலாம் எண்டு அப்புக்காத்தர் யோசிக்கிறார். ஆனால் அந்தக் கணக்கு சரிவருமா இல்லையா எண்டது [illegible] தெரிஞ்சிடும் கண்டியளோ.

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 6000 மருத்துவர்களுக்கு மே 10 இல் இடமாற்றம்!

## அமைச்சர் நளிந்த உறுதி

**கொழும்பு, ஏப். 2**

**திட்டமிட்டபடி எதிர்வரும் மே மாதம் 10ஆம் திகதி சுமார் 6,000 மருத்துவர்களுக்கான வருடாந்த இடமாற்றங்கள் வழங்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறுவது போன்று எவ்வித சட்டவிரோத இடமாற்றங்களும் வழங்கப்படவில்லை. பெப்ரவரி முதலாம் வாரத்திலிருந்தே இதற்கான முறையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 13 ஆண்டுகளில் முறையாக முன்னெடுக்கப்படாத இடமாற்றச் செயற்பாடுகள் தற்போது தான் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இடமாற்றச் சபையிலிருந்தவர்கள் கூட பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே இடத்தில் பணியாற்றிய அநீதிகள் இதன் மூலம் களையப்பட்டுள்ளன.

மருத்துவர்களின் இடமாற்றங்கள் மற்றும் பின்தங்கிய பிரதேசங்களுக்கான நியமனங்களை மேற்கொள்ளும் முழு அதிகாரமும் சுகாதார அமைச்சுக்கே உண்டு. நாடு தற்போது பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில், ஒரு குறுகிய குழுவின் நலனுக்காக முன்னெடுக்கப்படும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் முற்றிலும் நியாயமற்றவை. புதிய மருத்துவர்களுக்கான நியமனங்கள் மற்றும் ஏனையோருக்கான வருடாந்த இடமாற்றங்கள் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கமைய எவ்வித மாற்றமுமின்றி நடைமுறைப்படுத்தப்படும் - என்றார். (ச-இ)




## அன்பே அழகான அணிகலன்

இயேசு தாம் கடவுளிடமிருந்து வந்ததுபோல் அவரிடமே திரும்பிச் செல்லவேண்டும் என்பதனை அறிந்தவராக தனது தெய்வீகப் பிரசன்னத்தையும், பணிக்குருத்துவத்தையும் உலகிற்கு உவந்தளிக்கச் சித்தம் கொண்டு திவ்விய நற்கருணையை இறுதி இராவுணவில் ஏற்படுத்தினார். அதேவேளை பணிவாழ்வை எமக்கு ஒப்படைக்கும் பொருட்டு தன்னைத் தாழ்த்தி சீடர்களின் பாதங்களைக் கழுவி 'நீங்களும் அவ்வாறே செய்யுங்கள்' என்று பணித்தார். இதுவே புனித வியாழனின் சிறப்பாகும்.

தலைவனுக்குப் பணிபுரிவது உலக இயல்பு. குருவுக்குக் கீழ்ப்படிவது நடைமுறை. கடவுளுக்குப் பணிவது பக்திமுறை ஆனால் அரசரும் போதகரும் ஆண்டவருமாகிய இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவியது புதியமுறை. நிறை அன்பின் செயல். 'பணிவிடை பெறுவதற்கல்ல பணிவிடை புரிவதற்கே வந்தேன்' என்று கூறியதைச் செயலில் காட்டினார். தன்னையே தாழ்த்தி எமக்காக தன்னை அர்ப்பணித்த தியாகச்செயலுக்கு நாம் செலுத்தும் கைமாறு, நன்றிக்கடன் என்ன?

பொறாமை, விரோதம், ஆதிக்கம், பகைமை, துரோகம் என்பன அன்புக்குத் தடைபோடும் சுவர்களாகும். தியாகம், பணிவு, கருணை, பரிவு, அக்கறை என்பன அன்பை வலுப்படுத்தும் ஆற்றல் மிக்கவை. தூய அன்பு உயர்வு, தாழ்வு பார்க்காது. வறுமை, சிறுமை, அந்தஸ்து நோக்காது. இதனையே இன்றைய சாராம்சமாக இயேசு செயற்படுத்தினார். நற்கருணையில் இயேசு உயிரும் உடலுமாக வீற்றிருக்கிறார் என்பதை நம்பி ஆராதிப்போம். அன்பென்னும் சங்கிலியால் அனைவரையும் இணைத்து இறைவனோடு சங்கமிப்போம்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஏப்.2

கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செ.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகரும் சி.சிவதாசன், சிறப்பு விருந்தினராக மனித உரிமைகள் சட்ட ஆலோசகர் சமூக சேவைச் செயற்பாட்டாளருமான திருமதி சித்திராதேவி சுப்பிரமணியம், கௌரவ விருந்தினர்களாக குமரநகர் சனசமூக நிலையத் தலைவர் கி.திருவேந்தன், வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் சு.லபீந்திரன், உதயசூரியன் சனசமூக நிலையச் செயலாளர் சி.பூபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை பிரதோஷ விரத உற்சவம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (எ-41-66)

# பூநகரிக் கடற்பரப்பில் 36 மீனவர்கள் கைது

கிளிநொச்சி, ஏப்.2

கிளிநொச்சி, பூநகரிக் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடித்த குற்றச்சாட்டில் கடந்த திங்கட்கிழமை 36 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பூநகரிக் கடற்பரப்பில் சட்டவிரோதக் கடலட்டைப் பிடியில் ஈடுபட்டிருந்தபோது, கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின்போது அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது அவர்கள் பயன்படுத்திய ஆறு படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் நேற்றுமுன்தினம் மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளால் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது 36 மீனவர்களும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ச-113)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகளால் மனம் சஞ்சலப்படும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. நண்பர்களுக்காகச் செலவுசெய்யவேண்டி வரும்.

**மிதுனம்:** சாதகமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் ஆதாயம் கிடைக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டுச் சரியாகும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் உறவினர் ஒருவர் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதரவகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனந்தெரியாத சோர்வு உண்டாகலாம்.

**கும்பம்:** கணவன் - மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## வெற்றுக்கூச்சல்களும் காகிதக் குப்பைகளும்!

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டங்கள் அர்த்தமற்றவையாகவும், கண்துடைப்பாகவும் மாறிவருகின்றன என்று தெரிவித்திருக்கின்றார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன். காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், பௌத்தமயமாக்கல் உள்ளிட்ட விடயங்களில், ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரால் காத்திரமான பதில்களை வழங்கமுடியவில்லை என்றும் அவர் தனது அதிருப்தியைப் பதிவுசெய்துள்ளார். சுருக்கமாகச் சொல்வதாயின், யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தில் இடம்பெறும் அபிவிருத்திக்குழுக் கூட்டங்கள் தொடர்பில் பொதுமக்களின்நிலைப்பாடு என்னவோ, அதைத்தான் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் வெளிப்படுத்திய கருத்துகள் காலக்கண்ணாடியாகப் பதிவுசெய்திருக்கின்றன என்றால், அது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல.


யாழ்ப்பாணம் - தையிட்டியில் பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்து, சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்படுகின்றது என்ற விடயம், வலிகாமம் வடக்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் பலமுறை சுட்டிக்காட்டிய விடயம்தான். ஆனால், அந்த விகாரைக் கட்டுமானம் எந்தத் தடையும் இல்லாமல் கம்பீரமாக மேலெழுந்ததே தவிர, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களால் அதில் எவ்விதச் செல்வாக்கையும் செலுத்தமுடிவில்லை. இதைவிட வீதி அபிவிருத்தி, காணி விடுவிப்பு உள்ளிட்ட ஏராளமான விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் அந்த வாக்குறுதியின் பின்னரான நடவடிக்கைகள் கிணற்றில் போடப்பட்ட கல்போன்று அதே இடத்தில் நிற்கின்றதே தவிர எந்தவொரு சாதகமான மாற்றமும் ஏற்பட்டதாயில்லை.

இவ்வாறான நிலையில், மக்களின் வரிப்பணத்தில் வெற்றுக்கூச்சலுக்காகவும், காகித அறிக்கைகளை அள்ளிக் குவிப்பதற்காகவும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களை அவசியம் நடத்தத்தான் வேண்டுமா? என்ற சிந்தனை எழுவது இயல்பானது. தற்போது மட்டுமல்ல, இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்களின் காலத்தில் இருந்தே இதுவொரு சபிக்கப்பட்ட போக்காக அமைந்துள்ளது. எனவே, இதை மாற்றி எழுதவேண்டிய தேவைப்பாடு தற்போதைய அரசாங்கத்துக்கும், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருக்கும் இருக்கவே செய்கிறது. ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் உரிய கண்ணியத்தையும், மதிப்பையும் பெறவேண்டுமாயின், அவற்றின் அதிகாரங்கள் சமூகமட்டங்களில் வலுவாகத் தாக்கம் செலுத்த வேண்டும். அப்போதுதான் அதற்காகச் செலவிடப்படும் மக்களின் வரிப்பணத்துக்கு அர்த்தம் கிடைக்கும்.

இப்போதும்கூட, யாழ்ப்பாணம்-வயாவிளான் பகுதியில் உள்ள தனியார் காணிக்குள் இராணுவ மருத்துவமனையொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் கடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தற்போது அந்தக் கட்டுமானத்தை அனுமதித்துவிட்டால், இன்று திஸ்ஸ விகாரையை அகற்றுவதற்குப் பெரும்பாடுபடுவதைப் போன்றுதான் நாளை அந்த மருத்துவமனையை அகற்றுவதற்கும் நொந்து நூலாக வேண்டி வரும். எனவே, யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு வின் தலைவர் இந்த விடயத்தில் தனது ஆளுமையை நிரூபித்தாக வேண்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : [illegible]




### பொய்யாமொழி

**பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி**
**வேள்வி தலைப்படா தார்**

**பொருள்:** விருந்தினரை ஓம்பி அந்த வேள்வியில் ஈடுபடாதவர், பொருள்களை வருந்திக் காத்து (பின்பு இழந்து) பற்றுக் கோடு இழந்தோமே என்று இரங்குவர்.




## அரசாங்க ஊழியர்களுக்கு ரூ.5 இலட்சம் விசேட கடன்!

**கொழும்பு, ஏப். 2**

**2026ஆம் ஆண்டில் அரச ஊழியர்களுக்கான நிதி நிவாரணத்தை வழங்கும் நோக்கில், 5 இலட்சம் ரூபா வரையிலான விசேட சலுகைக் கடன்திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் கருத்திற்கொண்டு, அரச ஊழியர்களின் பொருளாதார நெருக்கடிகளைக் குறைப்பதற்காக 2026ஆம் ஆண்டிலும் விசேட சலுகைக் கடன்திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி முன்வைத்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ஒரு அரச ஊழியர் அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபா வரை இந்தக் கடனைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்தக் கடனுக்கான வட்டி வீதத்தில் ஒரு பகுதியை அரசாங்கமே மானியமாக ஏற்கும்.

அரச ஊழியர்கள் அந்தந்தத் திணைக்களங்கள் அல்லது நிறுவனத் தலைவர்களின் பரிந்துரையுடன், மேற்குறிப்பிட்ட அரச வங்கிக் கிளைகளுக்குச் சென்று விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதற்கான மேலதிக வழிகாட்டல்கள் விரைவில் நிதி அமைச்சினால் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## பணவீக்கம் மார்ச்சில் உயர்வு

கொழும்பு, ஏப். 2

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் படி, ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையிலான ஒட்டுமொத்தப் பணவீக்க வீதம் 2026 பெப்ரவரி மாதத்திலிருந்த 1.6 வீதத்திலிருந்து, 2026 மார்ச் மாதத்தில் 2.2 வீதமாக அதிகரித்துள்ளது. அத்துடன், உணவுப்பணவீக்கமானது 2026 பெப்ரவரியில் நிலவிய 0.2வீதத்திலிருந்து மார்ச் மாதத்தில் 0.7 வீதமாகவும், உணவல்லாத தொகுதியின் பணவீக்கம் 2.3 வீதத்திலிருந்து 2.9 வீதமாகவும் அதிகரித்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## ஓட்டோ சாகசம்; இருவர் கைது

கொழும்பு, ஏப்.2

வெலிவேரிய பகுதியில் முச்சக்கரவண்டியில் ஆபத்தான முறையில் சாகசம் செய்த வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவியதையடுத்து, அது தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று போக்குவரத்து வீதிப் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார். வெலிவேரிய பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 23 வயதுடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் கஞ்சா மற்றும் போதைமாத்திரைகளை உட்கொண்டிருந்தமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## 150 லீற்றர் டீசலைப் பதுக்கியவர் கைது

கொழும்பு, ஏப்.2

அனுமதிப்பத்திரமின்றி 150 லீற்றர் டீசலை வைத்திருந்த குற்றச்சாட்டில், நீர்கொழும்பு கொச்சிக்கடை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கொச்சிக்கடை பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)




## வற்வரி நடைமுறை ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப்.2

தரப்படுத்தப்பட்ட பெறுமதிசேர் வரிப்பட்டியல் முறையை நடைமுறைப்படுத்துவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த வரிப்பட்டியல் முறையை நடைமுறைப்படுத்தும் திகதி 2026 ஜூலை முதலாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தச் சீர்திருத்தம் ஆரம்பத்தில் 2026 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவிருந்தது. (ச-இ)

**நாளை**

வெள்ளிக்கிழமை - பங்குனி 20

03.04.2026

சுபநேரம் : 06.10 - 07.40

ராகுகாலம் : 10.40 - 12.10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கைதடி சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் வாராந்த சந்தை நிகழ்வு அண்மையில் வங்கி வளாகத்தில் இடம்பெற்றது. (ச-9)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் சஞ்சிகையின் 339ஆவது பங்குனி மாத இதழ் வெளியீட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ்சுவாமிகள் தலைமையில் இடம் பெற்றது. (ச-66-17)







ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பாடுகளின்சிலுவைப் பாதைக் காட்சி அண்மையில் நடத்தப்பட்டது. (ச)



மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும், வேலணைப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய தொழிற்சந்தை வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. பிரதேசசெயலர் த.அகிலன் தொழிற்சந்தையை ஆரம்பித்துவைத்தார். (க-17)



வேர்ல்ட்விஷன் நிறுவனத்தின் மதிநிலை மகளிர் திட்டத்தின் முதலாம் வருட பங்குதாரர்களுடனான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் புங்கங்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் விடுதியொன்றில் வேர்ல்ட்விஷன் நிறுவனத்தின் கண்காணிப்புப் பிரிவு மற்றும் பொறுப்புக்கூறல் பிரிவின் தலைவர் றொஜகுலாஸ் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் சாவகச்சேரி மற்றும் சங்கானைப் பிரதேச கமநலத் திணைக்களத்தின் பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-159)

மன்னார் பேசாலை சென்.மேரிஸ் வித்தியாலயத்தின் ஆரம்பப் பாடசாலையில் இல்ல விளையாட்டுப்போட்டிகள் கடந்த புதன் கிழமை இடம்பெற்றன. வித்தியாலயத்தின் அதிபர் திருமதி ஜே.எஸ்.விவியான் பீரீஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வட மாகாண அமலமரித் தியாகிகள் சபையின் தலைவர் அருட்பணி செபஸ்தியாம் பிள்ளை போல் ஜெயந்தன் பச்சேக் அடிகளார் பிரதம அதிதியாக பங்கேற்றார். (ச-41-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2025 க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

## யாழ்ப்பாணம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

**உயிரியல் பிரிவு**
எஸ்.அபிமன்யு 3ஏ, ஜே.மயூராஜ் 3சி, கே.கோபிகா 2சிஎஸ், எஸ்.அபிஷன் 2சிஎஸ், எஸ்.இளங்கீரன் சி2எஸ், ஆர்.கஜானி பி2சி, வி.விஷானிகா 3சி, கே.ஆகாஷ் 3சி

**வர்த்தகப்பிரிவு**
ஜி.அபிநயன் 3ஏ, எம்.தருண் சி2எஸ், டி.டினோஜன் 2சிஎஸ்.

**கணிதப்பிரிவு**
எஸ்.நிரேஷ் 3பி, எஸ்.கம்சிகன் 2பிசி, எஸ்.யதுஷன் பி2சி, ஏ.அபிலாயன் 3சி, எம்.மதுயன் பிசிஎஸ், எஸ்.நிக்ஷன் 2பிசி, ஜே.அபிஷன் 3சி, ஆர்.சியாமளன் 3சி

**கலைப்பிரிவு**
எஸ்.சஜித்தியா 2ஏபி, பி.விதுஷா ஏ2சி, ஆர்.சஜீவன் 2பிசி, கே.சிவரூபன் பி2சி, எஸ்.சஞ்சீவன் 2பிசி

**தொழில்நுட்பப்பிரிவு**
ஆர்.லக்ஷ்ணன் சி2எஸ், கே.பரபரன் 3எஸ், கே.கிரிஷிகன் 3எஸ்

## மன்னார் புனித சவேரியார் மகளிர் கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானப்பிரிவு**
எல்.ஆன் வினுஷிகா 3ஏ, ஜே.அபினா சுவுஞ்ளே 2ஏபி, சி.எம்.கனிசியா மிராண்டா ஏபிசி, எஸ்.அம்சஜினி 3பி, ஏ.எம்.விதுர்ஷா 3பி, எல்.வி.நிதிஸ்கா 3பி

**பௌதிக விஞ்ஞானப்பிரிவு**
சி.பி.தனிஷா ஏ2பி, டி.பிரியானா யுதித் ஏபிசி, கே.டி.எம்.டெல்கினி 2சிஎஸ்,

**கலைப்பிரிவு**
ஏ.கவினயா 3ஏ, ஏ.திருசிகா 3ஏ, பி.ஆன் செமினா 3ஏ

**வர்த்தகப்பிரிவு**
ஏ.எஸ்.ஷைனி ரெமிஷா 2ஏபி, எஸ்.குயீன் 2பிசி, டி.கௌசிகா விதுஷ்ணி பி2சி

## நெல்லியடி மத்திய கல்லூரி

**கலைப்பிரிவு**
எம்.மோகனராஜ் 3ஏ, பி.பிருந்தாஜினி 2பிஎஸ், வி.பிருத்திகா பி2சி, டி.அஸ்வினி பி2சி, ஏ.துலக்சனா பிசிஎஸ்

**வர்த்தகப்பிரிவு**
பி.துருபரண் 2ஏபி, டி.அபிலாஷ் ஏ2பி, எம்.சஜீபன் ஏபிசி, ஜே.திகழினி 3பி, எஸ்.அஷானா பி2சி, எஸ்.விஷ்ணுகா பிசிஎஸ்

**கணிதப்பிரிவு**
என்.சர்வின் ஏபிசி, எஸ்.ஜதுஷன் பி2சி, எம்.பிரணவன் பி2சி, வி.கௌதமன் பி2சி, எல்.பிரணவன் பி2சி, கே.கஜீவன் ஏசிஎஸ்

**உயிரியல் பிரிவு**
ஆர்.சந்தியா 3சி, எஸ்.வர்ஷன் 3சி, டி.காரிகரன் பிசிஎஸ், எஸ்.ஸ்ரீசஞ்சயன் 2சிஎஸ். பி. சாந்தரூபி பிசிஎஸ்

**பொறியியல் தொழில்நுட்பப்பிரிவு**
எஸ்.மதுஷன் 3பி, வி.பிரணவன் 2பிசி, பி.திகழவன் பி2சி, கே.அருண்சங்கர் 3சி, ஜே.கனுஜன் பி2சி, ஜே.சிந்துஜன் 3சி, கே.சைந்தன் பி2எஸ், எஸ்.மதுஷிகன் 3எஸ்

**ஏனையவை (கணிதத்துடன் ICT)**
ஏ.கலைஞ்சா 2பிசி, வி.யுவர்ஷன் 2சிஎஸ்

## மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி

**உயிரியல் பாடத்துறை**
A.சார்லஸ் 3ஏ, J.A.ஷரோன் 3ஏ, C.விஷால் 2பிசி, J.N.கெவின் 2பிசி

**பௌதீக விஞ்ஞானம்**
R.ருவனுஸ் பி2சி, J.திவ்வியரூபன் பி2சி, A.ஜூட் லிதுஷன் 2சிஎஸ், V.லிஷாலன் பிசிஎஸ், R.யோசுவாமானஸ் 2சிஎஸ்

**கலைத்துறை**
N.நிஷான் 3ஏ, ஜனுஷாந்த் 3ஏ, K.அனோக் பெர்னாண்டோ 2ஏபி, E.ஆகாஷ் மோசே 2ஏபி

**வர்த்தகத்துறை**
அஞ்சலோ 3ஏ, J.சாம்சன் 2ஏபி, N.பாவிகரன் 2ஏபி

**தொழில்நுட்பத்துறை**
D.A.போல் பிரஷாந்த் 2சிஎஸ், J.A.ஜோயல் லியோன் 2சிஎஸ், D.பெகின் சி2எஸ் R.மிட்செல் 3எஸ்

**ஏனைய பாடத்துறை**
S.ஸ்ரீவர்ஷன் பிசிஎஸ், M. பஹீல் பிசிஎஸ்




*உயர்தரப் பெறுபேறு*

# ஹாட்லி கல்லூரியில் நூறு சதவீத சித்தி!

*19 மாணவர்களுக்குத் 3ஏ*

க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் தோற்றிய மாணவர்கள் அனைவரும் சித்தி பெற்றுள்ளதுடன், 19 மாணவர்கள் 3ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

கணிதப்பிரிவில் அனுராகாந்தன் விஸ்வாகாந்தன் 3ஏ சித்தி பெற்று மாவட்ட ரீதியில் முதலாவதாகவும் தேசிய ரீதியில் 12 ஆவதாகவும் இடம்பெற்றுள்ளார். இதே போன்று உயிரியல் பிரிவில் சந்திரபபா ஹதுஷன் 3ஏ சித்திபெற்று மாவட்ட ரீதியில் முதலாவதாகவும் தேசிய ரீதியில் 20ஆவதாகவும் இடம்பெற்றுள்ளார்.

கணிதப்பிரிவில் 10 மாணவர்கள் 3ஏ, 2 மாணவர்கள் 2ஏபி சித்தியும், உயிரியல் பிரிவில் 6 மாணவர்கள் 3ஏ, 4 மாணவர்கள் 2ஏபி சித்தியும், வர்த்தகப்பிரிவில் 2 மாணவர்கள் 3ஏ, ஒரு மாணவர் 2ஏபி, 2 மாணவர்கள் 3பி சித்தியும், கலைப்பிரிவில் ஒரு மாணவர் 3ஏ, 2 மாணவர்கள் 2ஏபி, ஒருவர் ஏ2பி, ஒருவர் ஏபிசி சித்தியும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-100)

# யாழ்.இந்துக் கல்லூரியின் 64 மாணவர்கள் 3‘ஏ’ சித்தி

யாழ்ப்பாணம், ஏப். 2

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 64 மாணவர்கள் 3ஏ சித்திகளைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் முடிவுகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு வெளியானது.

இந்தநிலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 64 மாணவர்கள் 3ஏ சித்திகளையும், 31 மாணவர்கள் 2ஏ சித்திகளையும், 21 மாணவர்கள் ஏ2பி சித்திகளையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

அதற்கமைய, உயிரியல் பிரிவில் 19 மாணவர்கள் 3ஏ சித்திகளையும், பௌதீக விஞ்ஞானப்பிரிவில் 42 மாணவர்கள்3ஏ சித்திகளையும், கலைப்பிரிவில் 2 மாணவர்கள் 3ஏ சித்திகளையும், வர்த்தகப்பிரிவில் மாணவரொருவர் 3ஏ சித்திகளையும் பெற்றுச் சாதித்துள்ளனர். (உ-66)

# வேம்படி மகளிர் கல்லூரியில் 41 மாணவர்கள் 3‘ஏ’ சித்தி

யாழ்ப்பாணம், ஏப். 2

வெளியாகியுள்ள 2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 41 மாணவிகள் 3ஏ சித்திகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். குறித்த பாடசாலையிலிருந்து இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளில் உயிரியல் விஞ்ஞானத்துறையில் 24 மாணவிகளும், பௌதீக விஞ்ஞானத்துறையில் 9 மாணவிகளும், வணிகப்பிரிவில் 7 மாணவிகளும், கலைப்பிரிவில் ஒரு மாணவியும் 3ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையைத் தாக்கிய 'டித்வா' 7 பில்லியன் டொலர் இழப்பு!

ஐ.நா. தகவல்

**கொழும்பு, ஏப்.2**

**கடந்த நவம்பர் மாத இறுதியில் இலங்கையைத் தாக்கிய 'டித்வா' சூறாவளி மற்றும் அதைத் தொடர்ந்த இயற்கை அனர்த்தங்களால் இலங்கைக்கு சுமார் 6 முதல் 7 பில்லியன் அமெரிக்க டொலர் வரை பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் உதவி செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா உள்ளிட்ட பிரதிநிதிகள் இணைந்து வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூறாவளியைத் தொடர்ந்த கனமழை மற்றும் மண்சரிவால் இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 20 சதவீதம் நீரில் மூழ்கியது. ஏற்கனவே பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் நிலையில் இருந்த இலங்கைக்கு, இந்த அனர்த்தம் சுமார் 7 பில்லியன் டொலர் இழப்பை ஏற்படுத்தியுள்ளமை மிகப் பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது.

அனர்த்தங்களின் போது நிவாரணப் பணிகளுக்காக அரசாங்கம் மேலதிகமாகச் செலவிட வேண்டியுள்ளது. விநியோகச் சங்கிலிகள் மற்றும் வணிகங்கள் முடங்குவதால் அரசாங்கத்தின் வருமானம் குறைகிறது. சேதமடைந்த உட்கட்டமைப்புகளை மீளமைக்க மீண்டும் கடன் பெற வேண்டியுள்ளதால், அது நாட்டின் பெரும்பாகப் பொருளாதாரத்தை மேலும் நலிவடையச் செய்கிறது.

பேரனர்த்தங்கள் ஏற்படும் காலங்களில், சர்வதேசக் கடன் மீள்செலுத்துகைகளைத் தானாகவே ஒத்திவைக்கும் 'காலநிலை மீள்திறன் கடன் உட்பிரிவுகளை' நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதன் மூலம் அனர்த்தம் ஏற்பட்ட உடனே கடனைத் திருப்பிக் கொடுக்காமல், அந்தப் பணத்தை மக்களின் அவசரத் தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியும்.

இலங்கை போன்ற நலிவுற்ற பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளுக்கு இவ்வாறான பாதுகாப்பு வழிமுறைகள் இன்றியமையாதவை - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# சங்நிதியான் ஆச்சிரமத்தால் கர்ப்பிணிகளுக்கு சத்துணவு

யாழ்ப்பாணம், ஏப்.2

வடமராட்சியில் தெரிவுசெய்யப்பட்ட 25 கர்ப்பிணிகளுக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால், ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருள்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் சத்துணவுப் பொருள்களை நேரடியாகச் சென்று பயனாளிகளுக்கு வழங்கினார். தொண்டைமானாறு தெற்கு ஜே/383 கிராம அலுவலர் பிரிவு, கெருடாவில் வடக்கு ஜே/386 கிராம அலுவலர் பிரிவு, கெருடாவில் தெற்கு ஜே/385 கிராம அலுவலர் பிரிவு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கே சத்துணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (க-66)

# மாகாணசபை முறைமை தொடர்பாக கிளிநொச்சியில் கருத்தாடல் அரங்கு

கிளிநொச்சி, ஏப்.2

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஏற்பாட்டில், மாகாணசபை முறைமையும், அதிகாரப் பகிர்வும் எனும் தலைப்பிலான கருத்தாடல் அரங்கு நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு, கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் மாகாணசபை அதிகாரங்களும், சவால்களும் எனும் தலைப்பில் சமூக ஆய்வாளர் இரேனியல் செல்வின், மாகாணசபையும் அதிகாரங்களும் எனும் தலைப்பில் பொறியியலாளர் கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமார், மாகாணசபையும், மலையக மக்களின் வாய்ப்புகளும் எனும் தலைப்பில் சமூக ஆய்வாளர் பெரியசாமி முத்துலிங்கம், மாகாணசபைமுறைமை, தென்னிலங்கையின் தற்போதைய மனநிலை எனும் தலைப்பில் ஆய்வாளர் ஹரிந்திரா பி. திசாநாயக்க, நிலையான தீர்வுக்கான படிக்கல்லாக மாகாணசபை எனும் தலைப்பில் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன், மாகாணசபையும் இன்றைய அரசியல் சூழலும் எனும் தலைப்பில் தினக்குரல் முன்னாள் பிரதம ஆசிரியர் வீரக்கத்தி தனபாலசிங்கம் ஆகியோர் கருத்துரைகளை ஆற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-214)

### பாடசாலை மாணவனுக்கு

# சிகிச்சை மறுப்பு விவகாரம்; ம.உ.ஆ. குழுவுக்கு அறிக்கை

**யாழ்ப்பாணம், ஏப்.2**

**இளவாலைப் பிரதேச மருத்துவமனையில், மாணவன் ஒருவருக்கு, சிகிச்சை வழங்காமை மற்றும் மருத்துவர் கடமையில் இல்லாமை தொடர்பான விளக்க அறிக்கை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.**

இந்த விவகாரம் தொடர்பில் இளவாலைப் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரியிடம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகம் விளக்கம் கோரியிருந்தது. அதன் பிரதி யாழ். பிராந்தியச் சுகாதாரச் சேவைகள் பணிப்பாளருக்கும் அனுப்பப்பட்டது. அதற்கமைவாக இளவாலைப் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரியும், யாழ். பிராந்தியச் சுகாதார சேவைகள் பணிப்பாளரும் தமது விளக்கங்களை கடந்த திங்கட்கிழமை சமர்ப்பித்துள்ளனர்.

"உணவு இடைவேளைக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. எமது அலுவலகத்துக்கு நிரந்தரச் சாரதி இல்லாமையால், அன்புலன்ஸைத் தற்காலிகமாக யாழ். பிராந்தியச் சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியுடன், காரைநகர்ப் பிரதேச மருத்துவமனைக்கு விடுவித்துள்ளோம். எமது மருத்துவமனையில் தாதிய உத்தியோகத்தர் இதுவரை நியமனம் செய்யப்படவில்லை" என்று இளவாலைப் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை யாழ். பிராந்தியச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தனது அறிக்கையில், இனிவரும் காலங்களில் மருத்துவர்கள் தொடர்ந்து மருத்துவமனையில் தங்கியிருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இளவாலைப் பிரதேச மருத்துவமனைக்கு அன்புலன்ஸ் ஒன்று தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனைக்குத் தாதிய உத்தியோகத்தருக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி இதுவரை இல்லாத காரணத்தால், முகாமைத்துவ ஆளணிப் பிரிவுக்கு, தாதிய உத்தியோகத்தர் ஆளணியை உருவாக்குவதற்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (க-66,27)



# தந்தை செல்வநாயகத்தின் 128ஆவது ஜனனதின நிகழ்வு

மன்னார், ஏப்.2

தந்தை செல்வா என அழைக்கப்படும் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 128 ஆவது பிறந்தநாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னாரில் நினைவு கூரப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார்க் கிளையின் ஏற்பாட்டில் மன்னார் பஜார்ப் பகுதியில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் சிலையடியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் மன்னார்க் கிளை உறுப்பினர்கள், கட்சியின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக கட்சியின் மன்னார் நகரசபை உறுப்பினர் அன்ரனி டேவிட்சன் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட் (ச-56)

# பதவி வழங்காமைக்கு எதிராக ஷானி அபேசேகர மனுத்தாக்கல்

கொழும்பு, ஏப்.2

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியை வழங்குவதற்கு பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பொலிஸ்மா அதிபர் அளித்த பரிந்துரை நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஷானி அபேசேகர நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பாய ஆணைக்குழுவில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் செய்த பரிந்துரையை பொலிஸ் ஆணைக்குழு நிராகரித்ததால் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று ஷானி அபேசேகர தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக அடுத்த மாதம் 23ஆம் திகதி விசாரணை நடத்த மேற்படி ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





## யானை-மனித மோதல்கள்; வட்டக்கச்சியில் செயலமர்வு

கிளிநொச்சி, ஏப்.2

யானை - மனித மோதலைத் தவிர்க்கும் வழிமுறைகள் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு வட்டக்கச்சியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சிநிலையத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மாகாண விவசாயத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'யானையுடன் இணைந்து வாழுதல்' எனும் தொனிப்பொருளில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது. இதில் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் உயிரியல் துறை விரிவுரையாளர் ச.விஜய மோகன் வளவாளராகக் கலந்துகொண்டார். (ச-113)



## இருட்டுமடுவில் புதிய பாலத்தை நிர்மாணிக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.2

முள்ளியவளை கணுக்கேணி மேற்கு கமக்கார அமைப்பு பிரிவிலுள்ள, ஆவரஞ்சாட்டி இருட்டுமடுவின் குறுக்காக புதியபாலமொன்றை நிர்மாணிப்பதுடன், அதோடு இணைந்த கம வீதியையும் சீரமைக்குமாறு, அந்தப் பகுதி விவசாயிகள், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆவரஞ்சாட்டிக்கு நேரடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர், அந்தப் பகுதி விவசாயிகள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்தார். இதன்போது விவசாயிகளால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த வீதியை தட்டாவயல், தேவர்கட்டு, வலையன் கமம், மலைப்புலவு, அரிவணங்கன், ஆவரஞ்சாட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். வீதியின் குறுக்காக பாலம் இன்மையாலும், வீதிச் சீரின்மையால் விவசாயத்துக்கான உள்ளீடுகளை வயல்களுக்கு எடுத்துச் செல்வதிலும், அறுவடை செய்யப்பட்ட நெல்லை எடுத்துச் செல்வதிலும் பெரும் இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றோம் என்று விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்ற நாடாளுமன்ற உறுப்பினர், கோரிக்கையை எழுத்துமூலமாக கையளிக்குமாறு விவசாயிகளிடம் கேட்டுக்கொண்டார். (க-246)

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 02 . 1945



இறப்பு 01 . 04 . 2026

### முருகேசு இராஜசிங்கம் (கண்ணுமாமா)

தென்மயிலை கட்டுவனை பிறப்பிடமாகவும் மேலயப்புலம் அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராஜசிங்கம் (கண்ணுமாமா) நேற்று (01.04.2026) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், சுபத்திரா தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான துரையப்பா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தனபாலசிங்கம், வாமதேவன், பரமேஸ்வரி, நகுலேஸ்வரி (கனடா), மங்களேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2026) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:


சகோதரி-மங்களேஸ்வரி +151 44677399

மனைவி-சுபத்திராதேவி 077 8910 266

(CS 31543) A

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 04 . 1947



இறப்பு 30 . 03 . 2026

### செல்லத்துரை சீவரத்தினம்

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், பள்ளம் தோட்டம் உடுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சீவரத்தினம் அவர்கள் கடந்த (30.03.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குலத்துரை - அன்னரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், குலவீரவதி அவர்களின் அன்புக் கணவரும், சிவகுமார், சிவகாமி, சிவரஜனி, சிவரஜன், மேகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், புவனேஸ்வரி, கருணாகரன், பாலகிருஷ்ணன், கருணராஜ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜிவதர்ஷினி, ஸ்ரீகுமரன், ஆதவன், புவிகரன், அர்ச்சனா, சிவகரன், அபிஷா, அர்சஜன், நிருணன், அர்ஜீன் ஆகியோரின் பாசமிகு பேரனும், திவ்யசபரியின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2026) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
பள்ளம் தோட்டம், உடுவில் தெற்கு, சுன்னாகம்.
076 336 3594

(CS/61119) J-1

Euro READYMIX
YOUR EASY CHOICE

- தற்போது நிலவும் மணலின் அதிக விலையையும். தட்டுப்பாட்டினையும் தீர்க்க வந்து விட்டது சிறந்த ஓர் தீர்வு.
- தரமான சிறந்த கலவை.
- நகரங்களில் இடப்பற்றாக்குறையை தடுத்தல்.
- விரைவாகவும் சுலபமாகவும் வேலைகளை செய்து முடிக்கலாம்.
- வேலை ஆட்களின் பற்றாக்குறையை தீர்த்தல்.
- தொகையாக கல்.மணல் பறித்து விரையப்படுத்துவதை தடுத்து பணத்தினை சேமிக்க சிறந்த ஓர் வழி.

MRP RS 1390/=



விநியோகஸ்தர், கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு விலைக்கழிவு உண்டு.
Direct contact Euro Readymix(pvt) LTD
076 324 9977
euroreadymix@hotmail.com

Euro READYMIX
YOUR EASY CHOICE


எமது கலவை விகிதம்:
பூச்சுக் கலவைக்கு:
1 பங்கு சிமெண்ட்க்கு 4பங்கு மணல்
கட்டுக்கலவைக்கு:
1 பங்கு சிமெண்ட்க்கு 4பங்கு மணல்
கொங்றீட் கலவைக்கு:
1 பங்கு சிமெண்ட்க்கு 2 பங்கு மணல் மற்றும் 3 பங்கு சல்லி

MRP RS 1390/=



விநியோகஸ்தர், கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு விலைக்கழிவு உண்டு.
Direct contact Euro Readymix(pvt) LTD
076 324 9977
euroreadymix@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுக் காலை பங்குனி உத்தரத்தை முன்னிட்டு காவடி உற்சவம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. சிறப்புப் பூசை, அபிஷேகம் என்பவற்றைத் தொடர்ந்து காவடி உற்சவம் நடைபெற்றது. (ச-17)



# சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம், ஏப்.2

ஏழாலை புனித இசிதோர் முன்பள்ளிச் சிறார்களின் 2026ஆம் ஆண்டுக்கான சிறுவர் சந்தை நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளிப் பொறுப்பாசிரியை திருமதி காண்டீபன் தவச்செல்வி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை வங்கியின் மல்லாகம் கிளை முகாமையாளர் எஸ்.சாந்தகுமார் பிரதம விருந்தினராகவும், வங்கியின் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் ரி.இராகவன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (எ-41-66)



யாழ். போதனாவின்

# பிரதிப் பணிப்பாளர் ரி.குகதாசன் ஓய்வு

யாழ்ப்பாணம், ஏப்.2


யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றிவந்த மருத்துவர் ரி.குகதாசன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமையுடன் ஓய்வுபெற்றுள்ளார். அவருக்கான சேவைநயப்பு நிகழ்வு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இதேவேளை மருத்துவர் குகதாசன் கடந்த 33 ஆண்டுகளாக வடமாகாணத்தின் பல்வேறு மருத்துவமனைகளில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)


கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக திருமதி மகாதேவன் தனுசியா கடந்த திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார். (ச-159)







ஈழத்துச் சித்தர் தவத்திரு யோகர் சுவாமிகளின் 62ஆவது ஆண்டு குரு பூசை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். கொழும்புத்துறையிலுள்ள யோகர் சுவாமிகளின் சமாதிக்கோவில் வளாகத்தில் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (எ-41-66)



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் பத்தாம் நாள் மாலைத் திருவிழா வான திருமஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நூற்றுக்கணக்கான அடியவர் களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-66)

# மரண அறிவித்தல்

பிறப்பு
04 . 07 . 1967



இறப்பு
01 . 04 . 2026

## லியோ றேமண்ட் இக்னேசியஸ் சுரேஸ்

யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியில் வசித்தவரும் தற்பொழுது இல. 162, பலாலிறோட் கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான லியோறேமண்ட் இக்னேசியஸ் சுரேஸ் நேற்று (01.04.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்டின் லியோ றேமண்ட் - செல்வராணி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் - தங்கச்சியம்மா (பொன்னாலை) தம்பதியரின் மருமகனும், ரஞ்ஜனி (சுமணா) யின் அன்புக் கணவரும், சில்வியா Bsc (Hons - IIT) வின் அன்புத் தந்தையும், யாசோதா, கில்டா குமுதினி ஆகியோரின் சகோதரனும், ஜனார்த்தனன், துவாரகி, கிருஸ்சாந், கிருஷிகா ஆகியோரின் அன்பு தாய் மாமனும், தவானந்தன், காலஞ்சென்றவர்களான ராஜன், மனோகரன் மற்றும் ஞீகாந்தன் (ஞீ), சசிதேவி, விஜயராணி, ஜெயராணி, கமலராணி, அபிராமி ஆகியோரின் மைத்துனரும், விக்னேஸ்வரன், யோகேந்திரலிங்கம், பரஞ்ஞானம், உதயகுமார், சற்குணநாயகி, காலஞ்சென்ற உமையாள் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (02.04.2026) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

162, பலாலி றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 955 8604

(cs -61116) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கின் ஏற்றுமதியை ஊக்குவிக்க தாவர தனிமைப்படுத்தல் அலுவலகம்!

## விவசாயக் கலந்துரையாடலில் ஆராய்வு

**யாழ்ப்பாணம், ஏப்.2**


**வடக்கு மாகாணத்தின் ஊடான ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கும், நோய்த்தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பலாலி சர்வதேச விமானநிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றை மையப்படுத்தி 'தாவர தனிமைப்படுத்தல் அலுவலகத்தை' முழுமையாக இயங்கச் செய்வது தொடர்பில் ஆராயப்பட்டது.**

வடமாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலில் இந்த விடயம் ஆராயப்பட்டது.

வெளிநாடுகளிலிருந்து (குறிப்பாக இந்தியாவிலிருந்து) கொண்டுவரப்படும் வாழைக்கன்றுகள் ஊடாக 'பனாமா' போன்ற கொடிய நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால், சுங்க அதிகாரிகளுடன் இணைந்து கடுமையான கண்காணிப்புகளை மேற்கொள்ளவும், ஏற்றுமதியாளர்களுக்கு இலகுவாகச் சான்றிதழ்களை வழங்குவதற்குமான வசதிகளை மேம்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. விதைச் சான்றிதழ்களைப் பெறுவதற்காக வடக்கிலிருந்து தெற்குக்கு விதைகளை அனுப்பிவிட்டு மாதக்கணக்கில் காத்திருக்கும் நிலையை மாற்றுவதற்காக, வடக்கு மாகாணத்துக்குள்ளேயே 'விதைப் பரிசோதனைச் சிறிய ஆய்வுகூடங்களை' விரைவாக நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை விவசாயத்தில் இளைஞர்களை ஈர்ப்பதற்காக பரந்தன் மற்றும் வவுனியா விவசாயக் கல்லூரிகளில் டிப்ளோமா கற்கைநெறிகளை விரிவுபடுத்துதல், இளைஞர்களுக்கு குறைந்த வட்டியிலான கடன் திட்டங்களை இலகுபடுத்துதல் மற்றும் பயன்படுத்தப்படாத அரச காணிகளை இளைஞர்களின் விவசாய முயற்சிகளுக்கு வழங்குதல் தொடர்பிலும் ஆராயப்பட்டது. அத்துடன் அனுமதியற்ற மற்றும் காலாவதியான விவசாய இரசாயனங்கள் சந்தையில் விற்கப்படுவதைக் கடுமையாகக் கட்டுப்படுத்தவும், அவ்வாறு ஈடுபடும் வர்த்தக நிலையங்களின் பதிவுகளை உடனடியாக இரத்துச் செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

கலந்துரையாடலில் தேசிய விவசாயப் பணிப்பாளர் கலாநிதி. விக்கிரமாராச்சி, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர், மேலதிகப் பணிப்பாளர், மாவட்ட பிரதிப் பணிப்பாளர்கள், மாவட்ட விவசாயப் பணிப்பாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர். (சு-27)



இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் 'நேர்மையான வாரம்' தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் வரணி மத்திய கல்லூரியின் அதிபர். இ.கோகுலராகவன் மற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்தூட்டல் வழங்கினர். (ச-159)

### ராஜபக்சக்களைக்...

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்தாரிகளை வெளிப்படுத்துவதாகக் கூறி முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில புத்தகமொன்றை அண்மையில் வெளியிட்டிருந்தார். இதையடுத்தே, உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில் ராஜபக்சக்களைக் காப்பாற்றுவதற்குச் சதி இடம்பெறுகின்றது என்று முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் பின்னாலுள்ள சூத்திரதாரியை அம்பலப்படுத்தும் நோக்கத்துடன் புத்தகமொன்றை வெளியிடவுள்ளதாக கம்மன்பில கூறியிருந்தார். பெரும் ஆச்சரியம் என்னவென்றால், அந்தச் சூத்திரதாரி ஸஹ்ரான் ஹாஷிம் என்று குறித்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸஹ்ரானை விடவும் இதனுடன் தொடர்புடைய சக்திகள் தொடர்பிலேயே தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. எனவே, இந்த நிகழ்வு நடத்தப்பட்டமை மிகப் பெரும் நகைச்சுவையாகும். ராஜபக்சக்களைக் காப்பாற்றும் நோக்கத்துடன் இடம்பெறும் சதியையே இந்த நிகழ்வுகள் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகின்றன. உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரும் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் - என்றார். (அ-ம)

### ஆக்கிரமிப்பு...

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர், பாதிக்கப்பட்ட பொதுமக்களுடன் இணைந்து மாதாமாதம் முன்னெடுக்கும் தொடர் போராட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாகவே நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள், தமிழ்த் தேசிய முன்னணியினர், அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். போராட்டத்தை முன்னிட்டு பொலிஸாரின் பாதுகாப்பும், புலனாய்வுக் கண்காணிப்பும் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

### கிளிநொச்சி...

தேசிய ரீதியில் முதலிடம் பிடித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகியிருந்தன. இந்த நிலையில் கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் முதலிடம் பிடித்துள்ள கிளிநொச்சிமாணவன்தெ.திருக்குமரனுக்குப் பல்வேறு தரப்பினரும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகேயும் அவருக்குத் தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார். (அ-ம)

### கடற்படையால்...

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் மாணவியான தேவதாஸ் கிஷானி உயிரியல் தொழில்நுட்பத் துறையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார். தேசிய ரீதியில் அவருக்கு 27ஆவது இடம் கிடைத்துள்ளது.

குறித்த மாணவி 10 மாதக் குழந்தையாக இருக்கும்போது, அவருடைய தந்தை கடற்றொழிலுக்குச் சென்ற வேளையில் கடற்படையால் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டிருந்தார். அதன் பின்னர், அந்த மாணவியின் தாயாரே வேலைசெய்து அவரைக் கற்பித்து வந்த நிலையில், அந்த மாணவி உயிரியல் தொழில்நுட்பத் துறையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார். (அ-ம-ச-27)

### ஊட்டச்சத்துக்...

ஏற்பட்டுவரும் நெருக்கடி காரணமாக ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரிக்கும் அபாய நிலைமை காணப்படுகின்றது. எனவே, நாட்டிலுள்ள குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் தாய்மார்களுக்காக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்துடன் கலந்தாலோசித்து விசேட வேலைத்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும். எண்ணெய் விலை மற்றும் மின்சாரக் கட்டணங்கள் மீண்டும் மீண்டும் அதிகரிப்பதால் மக்கள் பெரும் துன்பத்துக்கு ஆளாகி வருகின்றனர். எனவே, அரசாங்கம் சர்வதேச நிதி நிறுவனங்களின் பிடியில் சிக்கி அடிமையாகாமல், மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கான நலன்புரித் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் - என்றார். (அ-ம)

### போதை...

குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-110)

### இலங்கைக்கு...

பட்டிருந்த எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வுகாணும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. இவற்றில் ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள்களை இறக்குமதி செய்வதும் பிரதானமான நகர்வாக அமைந்திருந்தது. ரஷ்யாவின் உயர்மட்ட அதிகாரிகள் அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது அவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இலங்கைக்கு எரிபொருள்களை வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது. சுமார் 32 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் மற்றும் 5 ஆயிரம் மெற்றிக் தொன் ஜெட் எரிபொருளுடன் விரைவில் கப்பலொன்று வரவுள்ளது - என்றுள்ளது. (அ-ம-17)

### பலவந்தமாக...

சங்கத்தின் உபசெயலாளர் மேலும் தெரிவித்ததாவது:-

2019ஆம் ஆண்டில் இடமாற்ற செயன்முறைகளை எமது சங்கம் மிகச் சரியாகவும், மிகச் சிறப்பாகவும் முன்னெடுத்தது. 98 வீதமான பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. ஆனால், 2026ஆம் ஆண்டின் இடமாற்றங்கள் பெப்ரவரியில் தொடங்கப்பட்ட போதிலும் திட்டமிடப்பட்ட 6 ஆயிரம் இடமாற்றங்களில் ஐந்தில் ஒருபங்குக்கும் குறைவானவர்களையே கடந்த இரண்டு மாதங்களில் இடமாற்ற முடிந்துள்ளது. சுகாதார அமைச்சரின் செயற்றிறன் இன்மையைத்தான் இந்த விடயம் வெளிப்படுத்துகின்றது. மருத்துவர்கள் அரசியல் அதிகாரத்துக்கு அடிபணிந்தவர்கள் அல்லர். அவர்கள் யாருக்கும் கடன்பட்டவர்கள் அல்லர். அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர்கள் அழுத்தத்தின் கீழ் பணியாற்ற ஒப்புக்கொள்ள மாட்டார்கள். எனவே, மருத்துவர்களைக் கட்டாயப்படுத்தி சேவையைப் பெறும் செயற்பாட்டை அரசாங்கம் கைவிட வேண்டும் - என்றார். (அ-ம)

### அரச...

தழுவிய ரீதியில் இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சரிவிலிருந்து மீண்டுவந்து

# லக்னோவை வென்றது டெல்லி கப்பிட்டல்ஸ்!



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், பெரும் சரிவிலிருந்து மீண்டு லக்னோவைத் தோற்கடித்தது டெல்லி அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 18.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக அப்துல் சமட் 36 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் நடராஜன், இங்கிடி இருவரும் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணி ஒரு கட்டத்தில் 26 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. அந்த அணி கிட்டத்தட்ட தோல்வியடைந்து விட்டது என்று கருதப்பட்ட நிலையில், ரிஸ்வி, ஸ்ரப்ஸ் இருவரும் இணைந்து மிகச் சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினார்கள். இணைப்பாட்டம் 100 ஓட்டங்களைக் கடந்தது. பிறிதொரு இலக்கை இழக்காமல் 17.1 ஓவர்களில் வெற்றிபெற்றது டெல்லி. ரிஸ்வி 70 ஓட்டங்களையும், ஸ்ரப்ஸ் 39 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். (ம)



## முன்னாள் போராளிகளுடன்தமிழரசுக்கட்சியினர் சந்திப்பு

கிளிநொச்சி, ஏப்.2

முன்னாள் போராளிகள் மற்றும் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைமைகளுக்குமிடையிலான கலந்துரையாடல், கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் இலங்கை தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான கே.சயந்தன். சு.சுகிர்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டதுடன், தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

(க-113)

## காணி விற்பனைக்கு

வீடும் 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
சாவகச்சேரி பருத்தித்துறை வீதியில்
பெருங்குளம் சந்தியில் உள்ளது.

தொடர்பு: 076 093 6469,077 483 4306

(cr.473327) (N-1)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடம் காரைநகர் வீதியில் 32 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- யாழ் மானிப்பாய் வீதி ஆறுகால்மடச் சந்தி 1ம் ஒழுங்கை.
- யாழ் மாநகர சபை எல்லைக்குள்
- ஒரு பரப்பின் விலை முன்பகுதி 12 இலட்சம்,
  பின்பகுதி 10 இலட்சம்.
- 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- யாழ் பஸ்நிலையம் 1 1/2 km தூரம்,
- ஓட்டுமடச் சந்தி 300m.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- காரைநகர் வீதியிலிருந்து இரண்டாம் காணி.

**தொடர்பு:- 076 990 3039**
**077 468 3354**

(CS 31546) A

## TECHNA
Technical Institute

தொழினுட்பப்பிரிவு
077 170 3549
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

### A/L 2025 உயர்தரப் பரீட்சையில் மாவட்ட நிலையில்

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல், பொறியியல் தொழினுட்பவியல் இரு பிரிவுகளிலும் எமது மாணவர்களே முதலிடம்!

### உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|---|
| தே. கிஷானி | 2A B | 01 | தி. யானுஷா (கிளி) | B 2C | 02 |
| பி. கிபிசாலினி | 2A B | 02 | க. ருபிஷானி | 3C | 32 |
| சி. தர்சிகா | 2A B | 04 | சி. கோகிசன் | 3C | 33 |
| ஜெ. தனுறா | A B C | 05 | றோ. ஜிதுஷா | 2C S | 34 |
| நி. புவிதா | A B C | 06 | கி. சந்தியா | C 2S | 58 |
| அ. பேரெழிலன் | 2B C | 08 | அ. ஹர்சிகா | C 2S | 63 |
| த. லக்சன் | A B C | 10 | ச. நிலாந்தன் (கிளி) | 2C S | 05 |
| த. ஷார்மினி | B 2C | 17 | செயன்முறை, கருத்தரங்களில் பங்குபற்றியோர் | | |
| தி. ஜஸ்மிகா | 2B C | 18 | ப.ஸ்ரேயா (கிளி) | 2B C | 01 |
| ந. பானுசன் | 2C S | 29 | து. சுழகாசினி (கிளி) | 3C | 09 |
| | | | சி. மதுசாயினி | B C S | 38 |
| கோ. பவனா | 3C | 30 | கோ. அபிஷா | 2C S | 48 |

### பொறியியல் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|---|
| செ. வினுசிகன் | 2A B | 01 | ஜ.ஜனிதரன் | 2B C | 27 |
| சி. விதுசன் (முல்லை) | A 2B | 01 | பி. ஜெயபிரவின் | B 2C | 30 |
| அ. அன்புசெல்வன் | 2A B | 03 | ஆ. சுலக்சி | B 2C | 32 |
| ஜோ. இளங்கீரன் (கிளி) | 2B C | 03 | ற.தமிழரசன் | 3C | 36 |
| மு. முகாத் (மன்னார்) | 2C S | 03 | கு. பிரியந்தி | 3C | 39 |
| பி. சர்மிலன் (கிளி) | C 2S | 04 | ரா. ஷாகித் | 2C S | 49 |
| சி. தவிசன் | A 2B | 05 | ற. ஜானுயா | B C S | 50 |
| அ. சஜீந்த் | A 2B | 06 | ச. சங்கீதா | 3C | 51 |
| வி. தனுஜா | A B C | 07 | ச. தருஷ் | 2C S | 53 |
| சி. சந்தோஸ் | A 2B | 09 | வி. சரணியா | 3C | 54 |
| ச. பகிஸ்கர் | 2B C | 12 | ரா. சன்சிதா | C 2S | 70 |
| சி. தமிழழகன் | A B C | 13 | செயன்முறை, கருத்தரங்களில் பங்குபற்றியோர் | | |
| சு. வைஸ்ணவி | B 2C | 26 | சி. பௌசிகன் 2C S, 57 யோ. இந்துசன் 3C, 62 | | |

ஆரம்பம் A/L 2025 REPEAT BATCH – 04/04/2026, 8.00AM

## மரண அறிவித்தல்



பிறப்பு 13 - 06 - 1942

இறப்பு 31 - 03 - 2026

### கதிராசிப்பிளை மார்க்கண்டு

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிராசிப்பிள்ளை மார்க்கண்டு அவர்கள் கடந்த 31.03.2026 செவ்வாய்க்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செங்கமலம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், தியாகராஜா (அமரர்), கார்த்திகேசு (அமரர்), வீரசிங்கம் (அமரர்), இராசமணி (அமரர்), தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், குணவதி (அமரர்), மரியம்மா (அமரர்), பாக்கியம், தேவலட்சுமி அவர்களின் மைத்துனியும், ஸ்ரீரஞ்சனா (அமரர்), ஸ்ரீரவிகுலன் (அமரர்), கலைவாணன் (லண்டன், Proprietor – Marks Convenience Store) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விமலகுமாரி (யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.க), சாரதாதேவி (சீதை, லண்டன், Proprietor – Marks Convenience Store) ஆகியோரின் மாமியாரும், கிரிபரன் (Engineer, Founder – HAM & JaffnaRoots), அபிசாகினி (Trainee Medical student), ஜனார்த்தனன் (கனடா, Best Buy Canada – Maintenance Associate), ஸ்ரீபிரணவன் (OUSL, SLIC – Business Development Associate, Founder – JaffnaRoots), சயந்தன் (லண்டன், Boomkat – Music Distributor) ஆகியோரின் பேர்த்தியும், ஷண்வியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 03.04.2026 வெள்ளிக்கிழமை காலை 07:30 மணியளவில், மீசாலை வடக்கு, மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
044 7539 385048 (மகன்)
077 4550 480 (மருமகள்)
077 7700 282 (மருமகள்)

தகவல்: குடும்பத்தினர்.

(CS 31544) A

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org